**செய்தி வெளியீடு எண்: 725** **நாள்:01.10.2020**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு அரசு வழங்கும் திரைப்பட விருதுகள்**
**2016, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த தமிழ்த் திரைப்படங்கள் மற்றும் சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கான கால அவகாசம் நீட்டிப்பு– மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் அறிவிப்பு.**

தமிழ்நாடு அரசின் சார்பில் 2016, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளுக்கு தகுதியுடைய சிறந்த தமிழ் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களை தேர்வு செய்வதற்கு விண்ணப்பங்கள் 25.02.2020 முதல் பெறப்பட்டு வந்தன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 27.03.2020 மாலை 5.00 மணிவரை பெறப்படும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக 24.03.2020 முதல் ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தினால் குறித்த காலத்திற்குள் திரைப்பட விருதுகள் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து வழங்க இயலவில்லை, இந்த காலக்கெடுவை நீட்டித்து வழங்க வேண்டும், என்கிற திரையுலகத்தினரின் கோரிக்கையினை அரசு கனிவுடன் பரிசீலனை செய்து 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் விண்ணப்பங்கள் பெறப்படும் நாளை 29.10.2020 அன்று மாலை 5.00 மணி வரை நீட்டித்துள்ளது.

**பூர்த்தி செய்த விண்ணப்பங்கள்**

இயக்குநர் / உறுப்பினர் செயலாளர்,
திரைப்படத்துறையினர் நலவாரியம் (முதல் தளம்),
மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம்,
வாலாஜா சாலை, சென்னை–2.

என்கிற முகவரியில் வரும் 29.10.2020 மாலை 5.00 மணிவரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) பெறப்படும்

**கடம்பூர் ராஜு**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**